காலை முரசு

பக்கங்கள்:-22

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 06 | திங்கட்கிழமை | 22.09.2025 | அதிர்வு 052

## அத்தியாவசிய சேவையாக மின்சார சேவை பிரகடனம்

### வெளியாகியது வர்த்தமானி



மின்சாரம் வழங்கல் தொடர்பான அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கும் 06▶



# பழிவாங்கலுக்கு மட்டுமே அநுர அரசு முன்னுரிமை!

## சந்திரிகா கடும் விசனம்

**“நல்லாட்சியை முன்னெடுப்பதை விடவும், பழிவாங்கும் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு முன்னுரிமை வழங்கி வருகின்றது.”**

**- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடும் விசனம் வெளியிட்டுள்ளார்.** 06▶

# தென்மராட்சியில் மணல் கொள்ளையர்களின் டிரக்டர் மோதி குடும்பப் பெண் பரிதாப மரணம்

## 15 வயது மகன் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில்



**(த.சுபேசன்)**

யாழ். கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சாய் வீதி, வாகையடிச் சந்தியை அண்மித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் தனது மகனை ஏற்றிச் சென்ற 44 வயதான பெண்ணைச் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிரக்டர் மோதி விட்டுத் தப்பிச் சென்றிருந்த நிலையில் மேற்படி பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அதேநேரம் அவருடைய 15 வயது மகன் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




கடந்த ஆண்டு சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளைச் சமர்ப்பிக்கத் தவறிய 41 உயர் மட்டப் பிரமுகர்களில் ஒரு அமைச்சரவை அமைச்சர், பல ஆளுநர்கள், இராஜாங்க அமைச்சர்கள், தூதர்கள், மூத்த இராஜதந்திர ஊழியர்கள் மற்றும் நீதியரசர்கள் ஆகியோர் அடங்குகின்றனர் என்று லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் தெரிவித்துள்ளது.

சொத்து மற்றும் பொறுப்புகளை அறிவிக்காதவர்களின் திருத்தப்பட்ட பட்டியலை அந்த ஆணையம் ஓரிரு தினங்களுக்கு முன்னர் வெளியிட்டிருக்கின்றது.

முன்னாள் அமைச்சரவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான தாரக பாலசூரிய, சாந்த பண்டார, காதர் மஸ்தான், சிவநேசதுரை சந்திரகாந்தன், சுரேன் ராகவன் மற்றும் மறைந்த லொஹான் ரத்வத்த ஆகியோர் தங்கள் சொத்துப் பட்டியல்களைச் சமர்ப்பிக்கவில்லை.

2023 ஆம் ஆண்டு 9 ஆம் 06▶

# கொழும்பில் நடந்தது ஐ.தே.க. மாநாடு அல்ல அது அலிபாபா மற்றும் 40 திருடர்களின் மாநாடு

## பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் சாடல்



"கொழும்பில் நடந்தது ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு அல்ல. அது அலிபாபா மற்றும் 40 திருடர்களின் மாநாடாகும்."

– இவ்வாறு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் விமர்சித்துள்ளார்.

கொழும்பு தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு விமர்சித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமது ஆட்சிக் காலத்தில் இந்த நாட்டை நாசமாக்கியவர்கள், கொலைகாரர்கள் மற்றும் கொள்ளையர்கள் கூடிய மாநாடுதான் அது. மக்களால் புறக்கணிக்கப்பட்ட மற்றும் மக்கள் வெறுக்கின்ற அரசியல்வாதிகள்தான் அதில் பங்கேற்றனர். வெட்கம் இன்றி மலையகத் தலைவர்களும் பங்கேற்றிருந்தனர்.

நாட்டை நாசமாக்கிய இந்தக் கும்பலை மக்கள் ஒருபோதும் ஆட்சிக்குக் கொண்டுவரமாட்டார்கள்." – என்றார்.

# ரோஹித எம்.பியின் பிறந்தநாளில் அவரின் வீட்டுக்குச் சென்ற மஹிந்த




நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்தனவின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

பயாகலயில் உள்ள ரோஹித அபேகுணவர்தனவின் வீட்டுக்குச் சென்ற மஹிந்த ராஜபக்ஷவைக் காண்பதற்காக அவரது ஆதரவாளர்கள் வருகை தந்திருந்தனர்.

விஜேராம இல்லத்தில் இருந்து தங்காலைக்குச் சென்ற பின், மஹிந்த ராஜபக்ஷ வெளியில் கலந்துகொள்ளும் முதல் நிகழ்ச்சி இது என்று கூறப்படுகின்றது.



# புறக்கோட்டை தீ விபத்து தொடர்பில் ஆராய பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன

கொழும்பு புறக்கோட்டை முதலாம் குறுக்குத்தெருவில் கட்டடமொன்றில் பரவிய தீ 12 மணித்தியாலங்களுக்கு பின்னர் கட்டுப்பாடுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மின் உபகரண விற்பனை நிலையத்தின் நான்காவது மாடியில் நேற்று முன்தினம் மாலை தீ பரவல் ஏற்பட்டது.

இதன் பின்னர் அருகிலிருந்த மற்றுமொரு கட்டடத்திலும் தீ பரவியது.

பின்னர் 20 தீயணைப்பு வாகனங்கள் மற்றும் விமானப்படையின் பெல் 212 ரக ஹெலிக்கொப்டர், பொலிஸார், கடற்படையினர் மற்றும் துறைமுகத்தின் தீயணைப்பு பிரிவினர் உள்ளிட்டோர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்த தீ விபத்து தொடர்பான விசாரணைகளுக்காக பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

தீ விபத்து இடம்பெற்ற பகுதிக்கு அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் மற்றும் நீதவான் ஆகியோர் செல்லவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே விசாரணை குழு நியமிக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு பிரதியமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

# மத்திய கலாசார நிதியத்தில் 8,000 மில்லியன் ரூபா முறைகேடு

## பிரதியமைச்சர் கமகெதர திசாநாயக்க தெரிவிப்பு

මධ්‍යම සංස්කෘතික අරමුදල
மத்திய கலாசார நிதியம்
CENTRAL CULTURAL FUND

மத்திய கலாசார நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியின்றி 8,000 மில்லியன் ரூபாவிற்கும் அதிக தொகை முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளுக்காகநியமிக்கப்பட்டகுழுவினால்இந்தவிடயம் கண்டறியப்பட்டுள்ளதாக புத்தசாசன மற்றும் மத விவகார பிரதியமைச்சர் கமகெதர திசாநாயக்க தெரிவித்தார்.

மேற்படி குழுவின் இறுதி அறிக்கையின் பின்னர் பொதுநிதியை முறைகேடாக பயன்படுத்தியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதியமைச்சர் கூறினார்.

# ‘எங்கட புத்தகங்கள் இல்லத்தில்’ நாளை மாலை இலக்கியமாலை




பாரிஸில் வாழும் பிரபல எழுத்தாளர்கள் வி.ரி. இளங்கோவன் -- பத்மா இளங்கோவன் தம்பதியரின் ஐந்து நூல்களின் வெளியீட்டு நிகழ்வான “இலக்கிய மாலை“ நாளை செவ்வாய்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் கந்தர்மடம் அம்மன் வீதியில் (18௬2 இலக்கம்) அமைந்திருக்கும் “எங்கட புத்தகங்கள் இல்லத்தில்“ நடைபெறவிருக்கிறது.

சட்டத்தரணி சோ. தேவராஜா தலைமையிலான இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரைகளை இளம் ஆய்வாளர்கள் மாதவி உமாசுதசர்மா, சின்னராஜா விமலன், ச.சத்தியதேவன் ஆகியோரும் ஏற்புரைகளை நூலாசிரியர்களும் நிகழ்த்துவர். கலாசார உத்தியோகத்தர் சபா. தனுஜன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார்.

# காத்தான்குடியில் பஸ் - லொறி - ஓட்டோ ஒன்றுக்குப் பின்னால் ஒன்று மோதி விபத்து




(வ.சக்திவேல்)

கொழும்பிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி சென்ற அதி சொகுசு பஸ் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காத்தான்குடி பொலிஸ் பிரிவில், காத்தான்குடி பிரதான வீதியில் கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறி மற்றும் ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

பஸ்ஸ்/ம் லொறியும் மோதியமையை அடுத்து, பஸ்ஸின் பின்னால் சென்று கொண்டிருந்த ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

லொறி பிரதான வீதியின் சாலை ஓரமாக உள்ள உணவகம் ஒன்றின் முன் வீதி ஓரமாக நிறுத்த முற்பட்ட போது பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து லொறியின் பின்னால் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.



இவ் விபத்தின் போது ஓட்டோ, அதி சொகுசு பஸ் ஆகியவற்றின் முன் பகுதிகள் பாரிய சேதத்துக்குள்ளாகின. லொறியின் பின் பகுதியும் சேதத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பஸ்ஸிக் பயணம் செய்த பயணிகள் எவருக்கும் ஆபத்து ஏற்படாத நிலையில், பஸ்ஸின் சாரதி நடத்துனர் மற்றும் ஓட்டோ சாரதி ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்துப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஜனாதிபதி செயலக வாகனங்களை பழுதுபார்க்க 4 கோடி ரூபா செலவு



கடந்த ஆண்டில் ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக 64 கோடியே 53 லட்சத்து 36 ஆயிரத்து 774 ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தேசிய கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தின் அறிக்கைகளை மேற்கோள் காட்டி சிங்கள ஊடகமொன்று இதனை குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கைகளின்படி, 53 வாகனங்கள், மீண்டும் மீண்டும் 10 முதல் 17 தடவைகள் வரை பழுதுபார்க்கப்பட்டுள்ளதாகவும் பதிவாகியுள்ளன.

10 இலட்சம் ரூபாய் முதல் 4 கோடி ரூபாய் வரை மதிப்புள்ள 189 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் அந்த வாகனங்கள் ஒவ்வொன்றின் பழுதுபார்ப்புக்காக 10 இலட்சம் ரூபாய் முதல் 2.8 கோடி ரூபாய் வரை செலவிடப்பட்டதாகவும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பல்வேறு தரப்பினரால் பயன்படுத்தப்பட்ட 107 வாகனங்கள் கடந்த ஆண்டு செப்டம்பர் 21 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதி செயலகத்திடம் மீள ஒப்படைக்கப்பட்டன.

இந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்கும் பராமரிப்பதற்கும் ஜனாதிபதி செயலகம் 14 கோடியே 18 லட்சத்து 31 ஆயிரத்து 832 ரூபாவின செலவிட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கைகளை மேற்கோள்காட்டி குறித்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி செயலகத்தின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட 29 வாகனங்களின் உண்மையான இருப்பிடத்தை சரிபார்க்க முடியவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

இந்த வாகனங்கள் காணாமல் போனதாகவோ அல்லது எந்தவொரு நிறுவனம் அல்லது தனிநபரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவோ எந்த எழுத்துப்பூர்வ ஆதாரமும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் கணக்காய்வு அறிக்கை கூறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்துகள் நவம்பருக்கு பின் கொண்டுவரப்படும்

## சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்துகள் எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குப் பின்னர் நாட்டிற்குக் கொண்டுவரப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாட்டுக்கு நிதிப் பிரச்சினை காரணமல்ல என்றும் கொள்முதலில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான கொள்முதல் செயல்முறைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சில மருந்துகள் தனியார் சந்தைகள், மருந்தகங்கள் மற்றும் திறந்தவெளியில் கிடைக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மருந்துப் பதிவின் போது வரம்பற்ற விலைகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் அதற்கான பதிவை நாம் அனுமதிப்பதில்லை.

தெற்காசிய நாடுகளில் தற்போதைய சந்தை நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட விலை வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



எனினும் அதனை விரும்பாதவர்கள் மருந்துகளை விநியோகிக்க மாட்டார்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி மனுக் கோரிக்கை செய்யும் பொறுப்பு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

அதில் சுமார் 80 முதல் 85 சதவீத பணிகள் நிறைவு பெற்றுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

# கடந்த வாரம் அரிசி தொடர்பில் 70 சோதனைகளை முன்னெடுப்பு

கடந்த வாரத்தில் மாத்திரம் அரிசி தொடர்பான 70 சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

விலையைக் காட்சிப்படுத்தாமல் அரிசியை விற்பனை செய்தமை, அரிசியைப் பதுக்கி வைத்தல் உள்ளிட்ட சம்பவங்கள் இந்த சோதனை நடவடிக்கையின் போது வெளிக்கொணரப்பட்டன என நுகர்வோர் விவகார அதிகாரசபை குறிப்பிட்டது.

இதனிடையே, அரிசி தட்டுப்பாடு நாட்டில் இல்லையென அரசாங்கம் ஏலவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 80 இன் கீழ், அனைத்து பொது அதிகாரிகளும் பொதுப் பதவிகளில் இருப்பவர்களும் நாட்டிற்குள்ளும் வெளியேயும் தங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை அவ்வப்போது அறிவிக்க சட்டப்பூர்வமாகக் கடமைப்பட்டுள்ளனர்.

இந்தப் பட்டியலில் நான்கு முன்னாள் மாகாண ஆளுநர்களும் அடங்குகின்றனர். ரோஷன் குணதிலக, செந்தில் தொண்டமான், நவீன் திசாநாயக்க மற்றும் வில்லியம் கமகே ஆகியோர்களே அவர்கள்.

மேலும், பதினொரு தூதர்கள், துணை நிரந்தர பிரதிநிதிகள், உயர் ஸ்தானிகர்கள் மற்றும் அமைச்சர்கள் உட்பட குறைந்தது 28 மூத்த இராஜதந்திர அதிகாரிகள், இரண்டு முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியசர்களும் இதில் அடங்குகின்றனர் எனக் கூறப்படுகிறது.

\+ \+ \+

'அரசமைப்பு சர்வாதிகாரத்தை' தடுத்து நிறுத்தவும், ஜனநாயகத்தைப் பாதுகாக்க ஒன்றிணைந்து நிற்கவும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் அழைப்பு விடுத்தார்.

கட்சியின் 79 ஆவது ஆண்டு விழாவில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி, மற்ற கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு முன்னெடுக்கின்ற அல்லது பிரயோகிக்கின்ற அதிகாரத்தை புதிய ஒரு சொல்லாடல் மூலம் விமர்சிக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இப்போதைய ஆட்சியாளர்கள் மேற்கொள்வது சர்வாதிகார நடவடிக்கை என்று குறிப்பிடும் முன்னாள் ஜனாதிபதி அதனை 'அரசமைப்பு சர்வாதிகாரம்' என்கிறார். அதாவது இந்த சர்வாதிகாரம் சட்டம் ரீதியானது, அரசமைப்பு ரீதியானது. ஆனால் அது தவறானது என்பது அவரது வாதம்.

சரி. இத்தகைய அரசமைப்பு ரீதியான சர்வாதிகாரத்தை இந்த ஆட்சியாளர்களுக்கு வழங்கக் காரணமான அரசமைப்பை இந்த நாட்டுக்கு கொண்டு வந்தவர்கள் யார்?

1978 இல் இந்த அரசமைப்பை கொண்டு வரக் காரணமாக இருந்தவர்களில் ஒருவர் ரணில் விக்கிரமசிங்கதான். அவரின் அரசியல் குருவும், அவரது மாமனாருமான இலங்கை அரசியலின் 'கிழட்டு நரி' ஜே.ஆர்.ஜெயவர்த்தனதான் இந்த அரசமைப்பின் பிதாமகர்.

அவர் இந்த அரசமைப்பைக் கொண்டு வந்த சமயத்திலேயே இந்த அரசமைப்பு மூலம் இத்தகைய அரசமைப்பு சர்வாதிகாரம் அரங்கேறும் என்று பலரும் தலையில் அடித்துக் கொண்டு கூறினார்கள். ஆனால் அதையெல்லாம் உதாசீனம் செய்து ஜே.ஆரும் அவரது மருமகன் ரணிலாரும் சேர்ந்துதான் இதனைக் கொண்டு வந்தார்கள். இப்போது அந்த அரசமைப்பு வழங்கியுள்ள சர்வாதிகாரப் பிடிமானம் ரணிலுக்கு சூடு வைக்கின்றது. அதனால் அதை மாற்ற வேண்டும் என்று அவர் துடியாய்த் துடிக்கின்றார்.

அதற்கான வாய்ப்பை 2015 நல்லாட்சி அரசின் மூலம் மக்கள் அவருக்கு வழங்கினார்கள். ஆனால் அதிகாரத்திற்காக – தலைமைக்காக – ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அவர் நடத்திய சண்டைப் பிரசண்டம் அந்த வாய்ப்பை மண்ணாக்கியது.

அரசமைப்பு சர்வாதிகாரம் நாட்டில் ஏற்படக்கூடிய நிலைமைக்கு வழி செய்த – அரசமைப்பைக் கொண்டு வர – காரணமானவரும் ரணிலே. அதை அகற்றுவதற்குக் கிடைத்த வாய்ப்பைத் தன்னுடைய அரசியல் இலக்குகளுக்காக மண்ணாக்கியவரும் அவரே. இப்போது அது அவரையும் சேர்த்து நெருக்குகின்ற போது 'சுடுகுது... மடியைப் பிடி!' என்று அவர் துடிக்கின்றார்.

நல்ல வேடிக்கைதான் போங்கள்....!

## பழிவாங்கலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"கொழும்பில் பிரத்தியேகமாக இல்லம் ஒன்றைப் பெற்றுள்ள நிலையில் அதன் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றது. அதேநேரம், எனக்கு மருத்துவச் சிகிச்சைகளையும் பெற வேண்டியுள்ளது. ஆகவே, தற்போதைய அரச இல்லத்தில் தங்குவதற்கு இரண்டு மாத கால அவகாசம் கோரியிருக்கின்றேன்." – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை நீக்கும் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டமை உட்பட சமகால நிலைமைகள் சம்பந்தமாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"1994 முதல் 2005 வரை ஆட்சி செய்த எனக்குக் டொரிண்டனில் அரச இல்லம் வழங்கப்பட்டது. நான் இந்த இல்லத்துக்கு வரும்போது ஒரு புல்கூட இருக்கவில்லை.

நிலம் கூட நடக்க முடியாத அளவில் தான் இருந்தது. அந்தப் பணிகளை முன்னெடுப்பதற்கான நிதியை அப்போதைய ராஜபக்ஷ அரசிடம் கோரியபோது, அவர்கள் அதனை வழங்குவதற்கு மறுத்துவிட்டார்கள். அதன்பின்னர் நான் எனது சொந்த நிதியில் இருந்து 14 மில்லியன் ரூபா செலவழித்தே புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்தேன்.

தற்போது சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும், நான் கீழே விழுந்தமையால் இடுப்புப் பகுதியில் முறிவு ஏற்பட்டுள்ளது. இதற்கான சிகிச்சையைப் பெற்று வருகின்றேன். தினமும் உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டியுள்ளது.

ஆகவே, இந்த இல்லத்தில் ஆயுள் காலம் வரையில் தங்கியிருப்பதற்கான அனுமதியைக் கோரி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசுக்குக் கடிதம் அனுப்பி வைத்திருந்தேன். ஆனால், அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனது ரோஸ்மீட் பிளேஸ் வீட்டை விற்ற பிறகு கொழும்பில் எனக்கு வீடு இல்லை. கொழும்பில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுக்கும் முயற்சிகளை நான் முன்னெடுத்தபோது ஜே.வி.பி. சார்ந்த ஊடக மிரட்டல்களால் அவை தடைப்பட்டன.

குறிப்பாக வீட்டின் உரிமையாளர்களுடன் உரையாடி அவற்றைப் பெறுவதற்கான பரிவர்த்தனைகளை முன்னெடுக்க முயன்றபோது அந்தச் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக பல்வேறு சாட்டுகள் கூறப்பட்டன. அதற்கான காரணத்தை ஆராய்ந்தபோது, ஜே.வி.பி. தங்கள் அன்பான ஊடகவியலாளர்களை நியமித்து என்னைப் பற்றி அவதூறு பேசியதாகக் கேள்விப்பட்டேன்.

இந்தநிலையில் கொழும்பில் பிரத்தியேகமாகத் தங்குவதற்கான சிறிய இல்லம் ஒன்றை தற்போது பெற்றுக் கொண்டுள்ளேன். அங்கு, புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கு இரண்டு மாதங்கள் தேவைப்படுவதால் அதுவரையில் அரச இல்லத்திலேயே தங்குவதற்கு அனுமதி கோரியுள்ளேன்.

பல நாடுகளில், இதை விட பல சலுகைகள் உள்ளன. இந்தியாவில் கூட, சிறந்த சலுகைகள் உள்ளன. ஆனால், அரசு அது பற்றி கவனம் செலுத்தவில்லை.

எனது மகன் இலண்டனில் இருந்து நாடு திரும்பியிருந்ததோடு சிறிது காலம் ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தார்.

அதேநேரம் ஓய்வுபெற்ற ஐந்து ஜனாதிபதிகளில் தற்போதைய அரசால் விசாரணைக்கு உட்படுத்தப்படாத ஒரேயொரு நபர் நான்தான். நான் எந்தத் தவறும் செய்யவில்லை என்பது வெளிப்படையாகின்றது.

மேலும் இந்த அரசு நல்லாட்சியை நிலைநாட்டி முன்னெடுப்பதிலும் பார்க்கவும் ஆட்சியை விட பழிவாங்கும் செயல்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றார்கள். அவர்களுடைய சொந்த அரசில் ஊழலை எவ்வாறு தடுப்பது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. மோசடி செய்பவர்களைக் கைது செய்கின்றமை பற்றி மட்டுமே அவர்கள் தொடர்ந்து கூச்சல் இடுகின்றார்கள். நாட்டை வளர்ப்பது பற்றி அவர்கள் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. கல்வித் துறை குழப்பத்தில் உள்ளது. சுகாதாரத் துறை குழப்பத்தில் உள்ளது. அவற்றை அவர்கள் கவனிக்க வேண்டும்." – என்றார்.

## அத்தியாவசிய சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மின்சார சபை ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்து வரும் நிலையில் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியாகியுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் ஜனாதிபதியின் செயலாளரால் கையொப்பமிட்டு இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியாகியுள்ளது.

# இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள நவராத்திரி விழா காரைதீவில் இன்று ஆரம்பம்

( வி.ரி.சகாதேவராஜா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சுவாமி விபுலாநந்தர் பயிற்சி நிலையமும் சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன றமும் இணைந்து நடத்தும் நவராத் திரி விழா இன்று (22) திங்கட்கிழமை காரைதீவில் ஆரம்பமாகிறது.

இந்துசமய கலாசார அலுவல் கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.அநிருத்தனனின் வழிகாட்டலுக் கமைவாக முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் அவதரித்த இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

ஏற்பாடுகளை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மேற்கொண்டுள்ளார்.

இன்றில் இருந்து ஒன்பது நாள்க ளும் நாளாந்தம் ஓங்காரம், பஜனை, அஸ்டோத்திரம், சகலகலாவல்லி மாலை சக்தி பாடல்கள் பூசை, அறநெறிப்பாட சாலை மாணவர்களின் கலைகலாசார நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

## மலைமகள் துதி

# கழலினைப் பணிகிறோம் காத்திடு தாயே... !



உடலும் உளமும் உரமாய் இருக்க
உனது திருவடி துணையே எமக்கு
மனதில் அழுக்கை அகற்றிடு சக்தியே
மலரடி அடைக்கலம் துர்க்கை அம்மா!

தினமும் நின்னை நினைக்கிறோம் அம்மா
திசயெலாம் நீயே தெரிகிறாய் அம்மா
அனைத்தும் நீயாய் ஆகிறாய் அம்மா
அன்னை துர்க்கையே அருள்புரி தாயே!

துன்பம் இளைக்கும் துஷ்டர் திருந்த
துயரப் படுவார் துன்பம் நீங்க
பஞ்சம் பிணியும் பறந்தே ஓட
பாதம் தொழுகிறோம் பார்த்திடு அம்மா!

அரக்கக் குணங்கள் அகன்றிட வேண்டும்
அன்பும் அறனும் அமர்ந்திட வேண்டும்
தர்மம் தானம் பெருகிட வேண்டும்
தாயே துர்க்கையே நீதான் துணையே!

ஈரமும் ஈந்திடு வீரமும் ஈந்திடு
இன்புடன் இருக்க நல்லருள் நல்கிடு
காப்பவள் நீயே கருணையின் உருவே
கழல் பணிகிறோம் காத்திடு தாயே !



மகாதேவ ஐயர்
ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக்
கல்வி இயக்குநர்,
மெல்பேர்ன்,
ஆஸ்திரேலியா.




# மூன்று தேவிகளையும் கொண்டாடும் ஒன்பது நாள்களே நவராத்திரி!

துர்கையையும், லக்ஷ்மியையும், சரஸ்வதியையும் கொண்டாடும் 9 நாள்களைதான் நவராத்திரி என்று அழைக்கிறோம். நம் முயற்சிகளில் நாம் வெற்றி பெற வேண்டுமானால் அதனால் தெய்வத்தின் துணை என்பதும் கட்டாயம் இருக்க வேண்டும். அந்த தெய்வத்திடம் நாம் விரதங்கள் வழியாகவும், பூஜைகள் வழியாகவும், ஸ்லோகங்கள் சொல்வது வழியாகவும் தான் துணை கிடைக்கப் பெறச் செய்கிறோம்.

திருமாலோ சிவபெருமானோ நேரிடையாக நாம் கேட்கும் வரத்தைக் கொடுத்து விடுவார்களா என்றால், அது நிச்சயம் இல்லை. தாயார், அதாவது சக்தி ஸ்வரூபமான அம்பாள் பரிந்துரை செய்தால் மட்டுமே திருமாலும் ருத்ரனும் நமக்கு நாம் கேட்கும் வரத்தைத் தாயாரின் பரிந்துரையின் பேரில் நமக்குத் தருவார்கள். 'சக்தி இல்லையேல் சிவன் இல்லை' எனவே, அந்த சக்தியை நாம் நவராத்திரி நாள்களில் வழிபடும் போது, திருமகளின் திருவருளையும், திருமாலின் திருவருளையும் ஒருசேரப் பெற்றிட முடியும்.

நவராத்திரியின் 9 நாள்களுமே நம் வீட்டுக்கு வரக்கூடிய ஒவ்வொரு பெண்களையும் சக்தி ஸ்வரூபமாகவே பார்த்து, பாவித்து, அவர்களுக்கு வெற்றிலைப் பாக்கு, மஞ்சள், பூ, பழங்கள் எனக் கொடுத்து அவர்களை மகிழ்விக்கும்போது சக்தி வடிவமான அம்பாளும் மகிழ்கிறாள் என்பதில் சந்தேகமே கிடையாது. நவராத்திரியின் 9 நாள்களில், முதல் 3 நாள்கள் அம்பாள் வழிபாட்டுக்காக அர்ப்பணிக்கப்படும் நாள்கள். இந்த நாள்களில், மாஹேஸ்வரி, கௌமாரி, வாராஹி என்ற பெயர்களில் துர்கைக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறும். நவராத்திரியின் அடுத்த மூன்று நாள்கள் திருமகளுக்கு உரிய நாள்கள். மகாலட்சுமி, வைஷ்ணவி, இந்திராணி என்று தாயாரை வழிபடும் நாள்கள் இவை. கடைசி மூன்று நாள்கள், கலைமகளான சரஸ்வதிக்கு உரிய நாள்கள். சரஸ்வதி, நரசிம்ஹி, சாமுண்டி என்று சரஸ்வதியை வழிபடும் நாள்கள் இவை.

10 ஆம் நாளான விஜயதசமி திருநாளே வெற்றிகளைத் தரும் திருநாள். 9 நாள்கள் செய்த பூஜையின் பலனாக வெற்றிகளைக் கொடுக்கும் நாள், வெற்றிகளின் ஆரம்பத்துக்கான நாளாக விஜயதசமி பார்க்கப்படுகிறது.

'தேவி பாகவத' புராணத்தின்படி நாரத மஹரிஷி சீதையை பிரிந்து ஸ்ரீராமர் மனம் வருந்திக் கொண்டிருந்த சமயத்தில், அவரைச் சந்தித்து நவராத்திரி பூஜை செய்யும்படி சொன்னதாகவும், ராமர் அவ்வாறே நவராத்திரி பூஜையை செய்து ராவணனை வென்று சீதையை மீட்டு வந்த கதையை நமக்குச் சொல்கிறது. தீமையை அழித்து, நன்மையை வெற்றிகரமாக நிலை நாட்டுவதையே நவராத்திரி நமக்குக் காட்டுகிறது. அம்பாள் அதைத் தான் நவராத்திரியின் கடைசி மூன்று தினங்களில் நமக்குக் காட்டியும் தந்திருக்கிறாள் மஹிஷாசுரமர்த்தினியாக.

அம்பாள் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மஹிஷாசுரனை சம்ஹாரம் செய்தது அஷ்டமி தினத்தன்று. தேவர்கள் அம்பாளை வழிபட்டது நவமி அன்று. தசமி அன்று அம்பாள் தன்னுடைய மூலஸ்தானத்துக்குச் சென்றாள் என்றே புராணங்கள் குறிப்பிடுகின்றன. நம் கண்களுக்குத் தெரியாத தடைகளைத் தகர்த்தெறிய நவராத்திரி சமயத்தில் தேவியை வழிபட வேண்டும் என்றே குறிப்பிடுகிறது ஸ்கந்த புராணம்.

சுரதன் என்ற அரசன், தான் இழந்த ராஜ்ஜியத்தை நவராத்திரியில் சக்தியை வழிபட்டு மீண்டும் வெற்றிகரமாகப் பெற்றான் என்று கூறும் புராண குறிப்புகளும் உள்ளன. புராதனமான ஒரு விழா, புராணங்கள் பலவும் புகழ்ந்து சொல்லும் திருநாளான நவராத்திரி திருநாளை நாமும் மலைமகளையும், திருமகளையும், கலைமகளையும் நம் உள்ளத்திலும் இல்லத்திலும் நிறுத்தி வழிபடுவோமே.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## யாரிடையே ஒற்றுமை?

ஒரு கட்சி மட்டுமே சகல அதிகாரத்தையும் கைப்பற்ற வேண்டும் எனக் கருதும் ஜனநாயக விரோத ஆட்சிச் சிந்தனையை தோற்கடிக்க நாமனைவரும் ஒன்றிணைவோம்.

- இவ்வாறு அழைப்பு விடுக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நல்ல அழைப்புத்தான். இவ்வாறு அழைப்பு விடுப்பதற்கான நிலைமை ஏற்பட்டதற்கும், அதற்கு சரியான தீர்வு காண்பதற்கு இடைஞ்சலாக இருப்பதும் தான்தாம் என்பதை அவர் மறந்து அல்லது மறைத்து அல்லது மறுத்து கருத்து கூறுவதுதான் இந்த அழைப்பில் அபத்தமான விவகாரமாகும்.

“தற்போதைய அரசாங்கம் மிகவும் திட்டமிட்ட வகையில் இந்நாட்டில் ஒரு கட்சி மட்டுமே அரசாங்கத்தை அமைத்து ஆட்சியை நடத்தும் எண்ணக்கருவை முன்னெடுத்து வருகின்றது. மரண உதவிச் சங்கம், விவசாயிகள் சங்கம், மீனவர் சங்கம், இளைஞர் கழகம் முதல் மத ஸ்தலங்களின் பரிபாலன சபை வரை அனைத்தையும் அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் எடுக்க முயற்சித்து வருகின்றனர். சகல சமூக அமைப்புகளினதும் அதிகாரத்தை, கட்டுப்பாட்டை வலுக்கட்டாயமாக கைப்பற்ற முயற்சித்து வருகின்றனர். தற்போது சுயாதீன சிவில் பாதுகாப்புக் குழுவிற்கும் கூட அரசியல் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் இம்முறை உள்ளூராட்சி மன்றங்களுக்குப் புதிதாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவிக்கின்றார்.

நீண்ட காலம் எதிரணியில் இருந்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக போராட்டம் நடத்திய ஒரு கட்சி, அதிகாரத்துக்கு வந்த பின்னர் தன்னைத் தனித்துவமாக நிலைநிறுத்திக் கொள்ள முயற்சி எடுப்பது ஒன்றும் ஜனநாயக விரோதம் அல்ல.

தன்னுடைய கட்சி மட்டுமே சகல அதிகாரத்தையும் கைப்பற்ற வேண்டும் என்பதை ஓர் அரசியல் கட்சி நோக்கமாக வைத்திருப்பதும் தவறு என்று கூற முடியாது. அதே சமயம் வலிமையாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் ஒரு கட்சி ஜனநாயகம் என்ற பெயரில் தன்னுடைய வலிமையான இடத்தை மற்றைய கட்சிகளுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் அபத்தமாகும்.

ஆனால் ஒரு கட்சி தனித்துவமாக அதிகாரத்தை கைப்பற்றுவது ஜனநாயகத்திற்கு ஆபத்து என்பதை எதிர்க்கட்சி தலைவர் உணர்ந்து அதை மாற்றுவதற்கு முயற்சி எடுப்பதற்காக மக்களையும் எதிர்க்கட்சிகளையும் ஒன்றுபட அழைப்பது சரியானதுதான். ஆயினும் அந்த ஒற்றுமைக்குக் குந்தகமாக இருப்பவர்களில் தாமும் ஒருவர் என்பதை அவர் மறந்து விடக்கூடாது.

தான் நீண்ட காலம் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியுடனும், அதன் தலைவருடனும் தாம் கொண்ட குரோதமும், பகைமையும், அரசியல் காழ்ப்புணர்வும், முரண்பாடுன் மட்டும்தான் இன்றைய ஆட்சியாளர்களை அதிகாரத்துக்கு கொண்டு வந்தது என்பதையும், அவர்கள் தனித்துவமாக சகல அதிகாரங்களையும் கைப்பற்றுவதற்கு அந்த பிரிவினை மட்டுமே பிரதான காரணம் என்பதையும் அவர் உணர்ந்து கொள்வாராயில், இந்த ஒற்றுமைக்கான அழைப்பை வெளியில் மக்களை நோக்கி விடுவதற்கு முன்னர் முதலில் அவர் தன்னை நோக்கியே விடுத்திருப்பார்.

இதை அவருக்குச் சுட்டி காட்டுவது நமது கடமையாகின்றது.

# ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் காரணமாக பொருளாதாரம் வளர்ச்சியடையும்

## பிரதமர் மோடி தெரிவிப்பு



ஜி.எஸ்.டி. சீர்திருத்ததால் நாட்டில் பொருளாதார வளர்ச்சி வேகமெடுக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது போல் சரியாக மாலை 5 மணியளவில் நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி நேற்று உரையாற்றினார். இதன்போது பிரதமர் மோடி மேலும் தெரிவிக்கையில்,

“நாளை முதல் அடுத்த தலைமுறை ஜி.எஸ்.டி. சீர்திருத்தங்கள் அமலுக்கு வருகின்றன. நாளை முதல் மக்களின் சேமிப்பு அதிகரிக்கும். அவர்கள் விரும்பியதை வாங்கலாம். ஜி.எஸ்.டி. குறைப்பால் கோடிக்கணக்கான குடும்பங்கள் மகிழ்ச்சி அடையும்.

ஏழைகள், நடுத்தர வர்க்கத்தினர், மகளிர், விவசாயிகள், இளைஞர்கள் அவர்களுக்குப் பிடித்தமான பொருள்களை குறைக்கப்பட்ட விலையில் வாங்கலாம். இதனால், அனைத்து மாநிலங்களும் வளர்ச்சி நோக்கி முன்னேறும்.

சரக்கு போக்குவரத்தில் இருந்த தடைகளை தகர்க்கவே ஜி.எஸ்.டி. கொண்டு வரப்பட்டது. ஜி.எஸ்.டிக்கு முன்பு வரி விதிப்பு விகிதம் சிக்கலானதாகவே இருந்தது. ஜி.எஸ்.டி. அமுலாக்கம் இந்தியாவின் மிகப்பெரிய வரி சீர்திருத்தம். ஜி.எஸ்.டி. கொண்டுவரப்பட்டதன் மூலம் ஒரே நாடு ஒரே வரி என்ற கோடிக்கணக்கானோரின் கனவு நினைவானது.

நாளை ஜி.எஸ்.டி. சீர்திருத்தம் அமுலாவதால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகமெடுக்கும். இந்த சீர்திருத்தம் மூலம் இந்திய பொருளாதாரத்தின் புதிய சகாப்தம் தொடங்குகிறது. இனி ஜி.எஸ்.டியில் 5 வீதம், 18 வீதம் என இரண்டு வரம்பு மட்டுமே இருக்கும். இதனால், உணவு, மருந்து, வீட்டு உபயோகப் பொருள்களின் விலைகள் குறையும். கார், ஸ்கூட்டர் வாங்குவது எளிதாக்கப்படும். நடுத்தர மக்கள் தங்கள் இலக்குகளை எளிதாக நிறைவேற்றிக் கொள்ள முடியும். அவர்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்படும்.

வருமான வரியிலும் சலுகை, ஜி.எஸ்.டியிலும் சலுகை அளித்துள்ளோம். 25 கோடி பேரை ஏழ்மையில் இருந்து மீட்டுள்ளோம்.

ஜி.எஸ்.டி சீர்திருத்தத்தால், ஏழைகள், புதிய நடுத்தர வர்க்கத்தினராக தரம் உயர முடியும். சிறு, குறு வர்த்தக நிறுவனங்கள் பெருமளவில் பயனடைய முடியும். ஏன் சிறு கடைக்காரர் கூட பலனடையலாம். வருமான வரிச் சலுகை, ஜிஎஸ்டி குறைப்பால் மக்கள் 2.5 லட்சம் கோடி வரை மக்கள் செலவு குறைந்துள்ளது. ஜி,எஸ்,டி, வரி குறைப்பை நுகர்வோருக்கு கொண்டு செல்ல வியாபாரிகள் ஆர்வமாக உள்ளனர்

பொருள்களை முடிந்தவரை இந்தியாவிலேயே தயாரிக்க வேண்டும். அவை உலகத் தரம் மிக்கதாக இருக்க வேண்டும். இந்திய தயாரிப்புகளையே இந்தியர்கள் அதிகம் பயன்படுத்தும் நிலை வர வேண்டும். அப்போதுதான் சுய சார்பு இந்தியா இலக்கை எட்ட முடியும்.” என்றார்.

# அஜித்குமார் கொலை குறித்த வழக்கில் திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகை தாக்கல்



மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில் திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகையை சி.பி.ஐ. நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார், கோயிலுக்கு வந்த பெண் அளித்த நகை திருட்டு வழக்கு தொடர்பாக தனிப்படை பொலிஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

.இந்த வழக்கில் தனிப்படை காவலர்கள் 5 பேர் சி.பி.சிஐடி. போலீஸார் கைது செய்தனர். இந்த வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றக்கோரி உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் இறந்த அஜித் குமாரின் தாயார் உட்பட பலர் வழக்கு தொடர்ந்தனர்.

வழக்கு விசாரணையின் போது அஜித்குமார் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி தமிழக அரசே உத்தரவிட்டது. இதையடுத்து சி.பி.ஐ. விசாரணையை முடித்து ஒகஸ்ட் 20 இற்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அதன்படி சி.பி.ஐ. விசாரணை நடத்தி ஒகஸ்ட் 20 இல் ஒன்லைன் வழியாக குற்றப்பத்திரிகையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அதில் தனிப்படை வான் சாரதி 6 ஆவது குற்றவாளியாக சேர்க்கப்பட்டிருப்பதாக சி.பி.ஐ. தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. நீதிமன்ற உத்தரவுப்படி ஒரு மாதத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ததற்காக சி.பி.ஐக்கு நீதிபதிகள் பாராட்டு தெரிவித்தனர்.

இந்நிலையில் அஜித்குமார் வழக்கில் சி.பி.ஐ. தாக்கல் செய்த முதல் கட்ட குற்றப் பத்திரிகையை நீதிபதி திருப்பி அனுப்பினார். அதில் சில குறைபாடுகள் இருப்பதாகவும், அந்த குறைபாடுகளை சரிசெய்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சிபிஐ-க்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு மதுரை தலைமை குற்றவியல் நீதிபதி செல்வபாண்டி முன் நேற்று மீண்டும் வந்தது. அப்போது சிறையில் உள்ள 5 தனிப்படை காவலர்கள் பலத்த பாதுகாப்புடன் ஆஜர்படுத்தப்பட்டனர். 6 ஆவது குற்றவாளியாக சேர்க்கப்பட்ட டிரைவர் ராமச்சந்திரனும் நீதிபதி முன் ஆஜரானார். சி.பி.ஐ. தரப்பில் திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

தனிப்படை காவலர்கள் 6 பேருக்கும் சி.பி.ஐ. தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கையின் நகல் வழங்கப்பட்டது. பின்னர் 6 பேருக்கும் குற்றப் பத்திரிகையை படித்து பார்க்க அவகாசம் வழங்கி அடுத்த விசாரணையை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு தள்ளி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.





# காசாவில் இஸ்ரேலிய இராணுவம் நடத்திய தாக்குதலில் 60 பேர் பலி

காசா மற்றும் அதனை அண்டிய பகுதிகளைக் குறிவைத்து இஸ்ரேலிய இராணுவம் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதல்களில் 60 பாலஸ்தீனிய மக்கள் கொல்லப்பட்டனர் என காசா சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அடுத்த வாரம் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அமர்வு நடைபெறுவதற்கு முன்னோடியாக, அவுஸ்திரேலியா, பிரிட்டன், பெல்ஜியம் மற்றும் கனடா உட்பட 10 நாடுகள் இணைந்து சுதந்திர பாலஸ்தீனிய அரசை உரிய முறையில் அங்கீகரிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள நிலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.




காசாவின் உயரமான கட்டடங்களைக் குறிவைத்து இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலுடன், தரைவழி தாக்குதலும் இந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காசா நகரத்தின் கிழக்கு புறநகரப் பகுதிகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நகரின் மத்திய மற்றும் மேற்குப் பகுதிகளையும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நோக்கில் தாக்குதல்கள் இடம்பெறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது தாக்குதல்கள் இடம்பெறும் பிரதேசங்களிலேயே அதிக அளவிலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த நிலையில், இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை காரணமாகக் காசா பகுதிகளில் தங்கியுள்ள இஸ்ரேலியர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு எதிராக ட்ரம்ப் தொடர்ந்த அவதூறு வழக்கு தள்ளுபடி






தி நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு எதிராக டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்த 15 பில்லியன் டொலர் அவதூறு வழக்கை, அது தாக்கல் செய்யப்பட்ட விதத்தை காரணம் காட்டி நீதிபதி தள்ளுபடி செய்தார்.

பிரபல 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை, அதன் நான்கு பத்திரிகையாளர்கள் மற்றும் பதிப்பகம் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 15 பில்லியன் டொலர் நஷ்டஈடு கேட்டு அவதூறு வழக்கு தொடர்ந்திருந்தார்.

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையாளர்கள் எழுதிய புத்தகம் மற்றும் தனது நிதிநிலை குறித்த கட்டுரைகள் பொய்யானவை என்றும், தனது புகழுக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்குடன் வெளியிடப்பட்டதாகவும் ட்ரம்ப் குற்றம்சாட்டியிருந்தார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலில் ஆதிக்கம் செலுத்தும் முயற்சி இது என்றும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், 85 பக்கங்கள் கொண்ட இந்த வழக்கை விசாரித்த புளோரிடா மாகாண மத்திய நீதிமன்ற நீதிபதி ஸ்டீவன் மெரிடே, அதனைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு மனு, சட்ட விதிகளைப் பின்பற்றாமல், தேவையற்ற வசைபாடும் வார்த்தைகளுடன் மிக நீளமாக உள்ளது.

'நீதிமன்றம் என்பது அரசியல் பேரணிகளில் பேசுவதற்கான மேடையோ, விளம்பரத்திற்கான ஒலிபெருக்கியோ அல்ல' என்று நீதிபதி தனது உத்தரவில் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

இருப்பினும், இந்த வழக்கை முழுமையாக முடித்து வைக்காமல், 28 நாள்களுக்குள் 40 பக்கங்களுக்கு மிகாமல், கண்ணியமான முறையில் திருத்தப்பட்ட புதிய மனுவைத் தாக்கல் செய்ய ட்ரம்பின் சட்டத்தரணிகள் குழுவுக்கு நீதிபதி அவகாசம் வழங்கியுள்ளார்.

நீதிபதியின் இந்த உத்தரவை வரவேற்பதாக தி நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.



# அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அமைச்சர் பிமல் முன்னிலையில் நேற்றுமுன்தினம்

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேய விக்கிரமவின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர்களான கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் நாடாளுமன்றச் சபை முதல்வரும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சருமான பிமல் ரத்நாயக்கவின் பங்குபற்றலுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை அம்பாறை மாவட்ட செயலக ஏ.ஐ.விக்கிரம கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.எஸ். அப்துல் வாசித், அஷ்ரஃப் தாஹிர், அபூபக்கர் ஆதம்பாவா, கே.கோடிஸ்வரன், மஞ்சள சுகத் ரத்நாயக, ஏ.எம்.எம்.ரத்வத்தே, சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள்,– திணைக்களத் தலைவர்கள், உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.















# மலையகத் தொழிலாளர்களின் வேதனத்தை அதிகரிக்கக் கோரி உயர்நீதிமன்றத்தில் மனு

## பெண் தொழிலாளர்களின் இரு பிரதிநிதிகள் தாக்கல்

(செ.தி.பெருமாள்)

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனத்தை தற்போதைய வாழ்வாதாரத்திற்கு அமைவாக அதிகரிக்குமாறு கோரி, உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை பெண் தொழிலாளர்களின் இரு பிரதிநிதிகள் தாக்கல் செய்துள்ளனர்.

பெருந்தோட்ட தொழிலாளியான மஸ்கெலிய பிரவுன்சிவிக் தோட்டத்தை சேர்ந்த திருமதி பாலகிருஷ்ணன் தேவிகா மற்றும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கத்தின் பொதுச் செயலாளர் திருமதி மேனகா கந்தசாமி ஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக தொழில் ஆணையாளர் நாயகம், தொழில்



அமைச்சர், தேயிலைக்கான சம்பள நிர்ணய சபையின் செயலாளர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த கடந்த வெள்ளியன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பெருந்தோட்ட நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய கலந்துரையாடல் அடுத்த மாதம் இறுதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதிக்குள் தொழில் அமைச்சர் அறிவிக்க வேண்டும் என நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதில் உரிய தீர்வு எட்டப்படாவிட்டால் அடுத்த வருடம் ஜனவரி 20 ம் திகதி மீண்டும் மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

# தெதுரு ஓயாவில் மீன்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக மீன் பிடிப் போட்டி











(உடப்பு க.மகாதேவன்)

தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தில் கடந்த இரண்டு வருடங்களில் மிக வேகமாகப் பரவியுள்ள 'ஜயன்ட் ஸ்னேக்ஹெட்' மீன்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், "தெதுரு ஓயா மீன்பிடிப் போட்டி 2025" எனும் பெயரில் விசேட மீன்பிடிப் போட்டியும் பாதுகாப்புச் செயற்றிட்டமும் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றன.

இந்தச் செயற்றிட்டம், கடற்றொழில் அமைச்சின் பூரண வழிகாட்டலின் கீழ், 'அங்லிங் பிரஜாவ ஸ்போர்ட் ஃபிஷிங் கிளப்' மற்றும் அப்பிரதேச மீனவ சங்கங்கள், வயம்ப பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து மாகாண மீன்பிடி அமைச்சின் நேரடிப் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டது.

இதில் சுமார் ஐந்நூறு போட்டியாளர்கள் இணைந்து கொண்டனர்.

"அங்லிங் பிரஜாவ" சங்கத்தின் பிரதம போஷகர் பிரசன்ன பிரியகெலும் விக்ரமரத்ன குறிப்பிடுகையில், இந்தப் போட்டி நிகழ்வின் மூலம் ஒரே நாளில் பெருமளவிலான ஆக்கிரமிப்பு மீன்களைச் சூழலிலிருந்து அகற்ற முடியும் என நம்பிக்கை தெரிவித்தார். இந்த நிகழ்வின் மூலம் ஆக்கிரமிப்பு மீன்களை அகற்றுவது மற்றும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அப்பிரதேச மீனவ சமூகத்தை வலுவூட்டுவதற்கான விசேட வேலைத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அதன்படி, போட்டியில் பங்குபற்றியோருக்கு பணப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

அதேவேளை, தெதுரு ஓயா பகுதி மீனவ சமூகத்தினருக்கென பிரத்தியேகமாக 15 Fishing Rods, 3 தூண்டில் சுழற்சிகளும் (Reels) அடங்கிய பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



# வாழைச்சேனை கிண்ணியடி வாவியின் மத்தியில் மேட்டுநிலக் காட்டில் கசிப்பு உற்பத்தி நிலையம்!

## பொலிஸ் முற்றுகையில் வாமாகச் சிக்கியது

(கனகராசா சரவணன்)

வாழைச்சேனை கிண்ணியடி வாவியின் நடுவில் உள்ள மேட்டுநில காட்டு பகுதியில் இயங்கி வந்த பாரிய கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை கிழக்கு மாகாண குற்றப்பிரிவு பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் முற்றுகையிட்டு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை கைது செய்தமையுடன் 6 பரல் கொண்ட 1080 லீற்றர் கோடா, 30 லீற்றர் கசிப்பு என்பவற்றை மீட்டுள்ளனர் என வாழைச் சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாண குற்றப்பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து இந்தப் பகுதிக்கு நேற்றுப் பகல் கிழக்கு மாகாண குற்றப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரி.மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் தோணி மூலம் வாவியில் பிரயாணித்து அந்தப் பகுதியை சுற்றி வளைத்து முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு சட்டவிரோத கசிப்பு உற்பத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவரை கைது செய்தமையுடன் 6 பரல் கொண்ட 1080 லீற்றர் கோடா, 30 லீற்றர் கசிப்பும் மற்றும் உற்பத்தி உபகரணங்களை மீட்டு வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த சட்டவிரோத கசிப்பு உற்பத்திக் குழுவைச் சேர்ந்த ஒருவர் அண்மையில் கசிப்பு உற்பத்தி செய்வதற்கு வாவியில் பிரயாணித்த போது முதலை தாக்குதலுக்கு உள்ளாகி சடலமாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது



# முழு நாட்டிற்குமான தேசிய ஒற்றுமைக்காக கட்டப்பட்டதே மாவடிப்பள்ளி பெரிய பாலம்

## புனர்நிர்மாண அங்குரார்ப்பண நிகழ்வில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க உரை





**(பாறுக் ஷிஹான்)**

மாவடிப்பள்ளி பெரிய பாலமானது கடந்த வெள்ள அனர்த்தத்தில் உயிரிழந்த மாணவர்களின் ஞாபகார்த்தத்தின் பயனாக இன்று உள்ளது. இந்தப் பாலத்தின் மறுபக்கம் பார்த்தால் சிங்கள மக்கள் இருக்கின்றார்கள். இந்தப் பாலத்தின் தென்பகுதியில் பார்த்தால் காரைதீவு பகுதியில் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். இந்தப் பாலத்தின் இடது பக்கம் பார்த்தால் கல்முனை பகுதியில் முஸ்லிம் மக்கள் இருக்கின்றார்கள். இதனால் உண்மையில் நாங்கள் பார்க்கின்ற போது தேசிய ஒற்றுமைக்கான பாலம் இந்தப் பாலம்தான் எனக் கூற முடியும். இந்தப் பாலம் முழு நாட்டிற்கும் தேசிய ஒற்றுமைக்குமாக தேசிய மக்கள் சக்தியினால் கட்டப்பட்ட பாலமாகும் எனப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து சேவைகள் அமைச்சரும் நாடாளுமன்ற சபை முதல்வருமான அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அம்பாறை – கல்முனை காரைதீவை இணைக்கும் மாவடிப்பள்ளி பெரிய பாலம் புனர்நிர்மாண அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்த கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நேற்று முன்தினம் மாலை இந்தநிகழ்வு இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் தனது கருத்தில் தெரிவித்தவை வருமாறு:–

இதுவரையில் உள்ள அரச ஊழியர்கள் ஆண்களாக இருக்கட்டும், பெண்களாக இருக்கட்டும், எங்களுடைய கியருக்கு இன்னும் மாறவில்லை என்பது உங்களுக்குத் தெரியும் .

நாங்கள் மெது மெதுவாக கியரை மாற்றிக் கொண்டு முன்னேறிக்கொண்டிருக்கின்றோம். இன்னும் சில அரசியல் ஊழியர்கள் இருக்கின்றார்கள். சில பேர் "ரிவேஸ்" கியரில் இருக்கிறார்கள். இன்னும் சிலர் நியூட்டல் கியரில் உள்ளார்கள். இன்னும் முன்னுக்கு அவர்கள் போடவில்லை. ஆகையினால் நான்கு மாத குறுகிய காலத்தினுள் பொறியியலாளர்கள் இணைந்து இந்த பாலத்தின் திட்டங்களைத் தயாரித்து இந்த வேலைத் திட்டங்களை ஆரம்பம் செய்ததையிட்டு நாங்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும்.

2026 ஆம் ஆண்டுக்குரிய வரவு – செலவுத் திட்டத்தை நவம்பர் மாதம் 7ஆம் திகதி ஜனாதிபதி வாசிக்க இருக்கின்றார்கள். இதில் நாங்கள் தொன் கணக்கில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களுக்கு நிதியை ஒதுக்க இருக்கின்றோம்.

இதில் கால்வாய்கள், ஆறுகள், வைத்தியசாலைகள், பாடசாலைகளுக்கு இவ்வாறு நிதி ஒதுக்க இருக்கின்றோம். ஏழை மக்களுக்கு அஸ்வசும நிவாரணங்களை வழங்க இருக்கின்றோம். அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்போம். ஆனால் எமக்கு கடந்த 25 வருடங்களுக்கு பல்வேறுபட்ட தடைகள் இருந்தன. ஆனால் நாங்கள் இரண்டாவது கியரில் செல்ல வேண்டிய சந்தர்ப்பமும் வந்தது. ஆனால் 2026 ஆம் ஆண்டில் மூன்றாவது கியரைப் போட்டு முன்னேறிச் செல்வோம். அதுதான் நமது ஜனாதிபதி கூறுகின்ற வசனம். உலகமே இல்லாமல் செய்வோம். இதற்கு வேறு மொழி மாற்றம் இல்லை. ஆகையினால் தற்போது இருளாகி விட்டது.

உங்களுக்கு இறுதியாக ஒன்றை கூற விரும்புகின்றேன். நீங்கள் எவரும் யாருடைய கயிற்றையும் விழுங்க மாட்டீர்கள். இதில் விழுங்குகின்றவர்கள் ஒரு சிலர் இருந்தாலும் ஏனையோர் விழுங்க வேண்டாம். உங்கள் அனைவருக்கும் தெரியும், கடந்த காலத்தில் இனவாத அரசாங்கங்கள் இருந்தன. இந்தப் பகுதியில் உள்ள முஸ்லிம் மக்களாக இருக்கட்டும், தமிழ் மக்களாக இருக்கட்டும், எவராக இருந்தாலும் கொழும்பு அரசாங்கத்தினைச் சந்தேக கண்களுடன்தான் பார்ப்பார்கள்.

அதற்கு உண்மையான காரணங்கள் இருந்தன. இந்த காரணிகளால் இங்கு உள்ள அரசியல்வாதிகள் பல நன்மை அடைந்தார்கள். அவர்கள் கொழும்பில் இருந்தவர்கள். எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்றால் இனவாதத்தை வைத்துக் கொண்டுதான் அரசியல் செய்தார்கள் – மக்களின் வாக்குகளை பெறுவதற்காக. இன்று நாங்கள் தேசிய ஒற்றுமை உடைய அரசாங்கம் ஒன்றை உருவாக்கி இருக்கின்றோம். சமத்துவமான அரசாங்கம் ஒன்றை உருவாக்கி இருக்கின்றோம்.

முஸ்லிம் மக்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பிற்பாடு பாலஸ்தீன மக்கள் தற்போது அனுபவிக்கின்ற அந்த துன்பியல் போல் இல்லாவிட்டாலும் அது வன்மையான ஒரு துன்பத்தினை அந்த காலத்தில் இலங்கை முஸ்லிம்கள் அனுபவித்தார்கள். அந்த காலத்தில் முஸ்லிம்கள் மிக மன அழுத்தத்துடன் வாழ்ந்தார்கள்.

அநுர தோழரது அரசாங்கம் உருவாக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தி ஆகிவிட்டது. இப்போது நான் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன். முஸ்லிமாக இருப்பதினால் தற்போது ஏதாவது இடையில உள்ளதா? இடையூறு உள்ளதா? நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். பள்ளிவாசலுக்குச் சென்று அல்லாஹ்விடம் கேளுங்கள். தமிழ் மக்களிடம் கேளுங்கள். தமிழ் மக்கள் என்ற ரீதியில் பல கஷ்டங்களை அவர்கள் அனுபவித்தார்கள்.

இராணுவப் பாதுகாப்பு, வீதி தடைகளில் அடையாள அட்டை அவர்களிடம் பரிசோதனை மேற்கொண்டார்கள். இதில் சிங்கள மக்களின் அடையாளத்தை பார்த்தால் உடனே போகச் சொல்வார்கள். யுத்த காலத்தில் முஸ்லிம் மக்களிடமும் இந்த அடையாள அட்டையை பார்த்தால் ஒரு தரம் பார்த்துவிட்டு அவர்களையும் போகச் சொல்வார்கள். ஆனால் தமிழ் மக்கள் என்றால் இருதடவை அடையாள அட்டையை பரிசோதித்து விட்டு கொஞ்சம் இருக்கச் சொல்வார்கள்.

அதே போன்றுதான் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம் மக்களுக்கும் ஏற்பட்டது. அம் மக்களையும் ஒன்றிற்கு நான்கு தடவைக்கு மேல் அடையாள அட்டையை பரிசோதிப்பார்கள். இதில் ஏதாவது இடையூறு வருகின்றதா என பார்க்கின்றார்கள் என நினைப்போம். ஆனால் அவர்கள் அதில் இனம் என்னவென்று தான் அந்த பரிசோதனை நடவடிக்கையில் அவர்கள் பார்க்கிறார்கள்.

ஆனால் வடக்கில் பல இராணுவச் சோதனைச் சாவடிகளை பாதுகாப்பு தரப்பினரால் நீக்கி இருக்கின்றோம். இன்று நீங்கள் அவற்றைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்கள். நான் வடக்கில் பல வேலை திட்டங்களை முன்னெடுத்து இருக்கின்றேன். வடக்கில் வாழுகின்ற தாய்மார்களுக்கு கடந்த காலங்களில் இந்த மன நிலையில் தற்போது ஆறுதலாக வேலை செய்யக்கூடிய நிலைமை இருக்கின்றது என அறியக் கிடைத்திருக்கிறது. ஆனாலும் அவர்களுடைய மனதில் பழைய நினைவுகள் இருக்கும் என்பது எனக்கு தெரியும்.

தொடர்ச்சி▼

# முழு நாட்டிற்குமான தேசிய ஒற்றுமைக்காக கட்டப்பட்டதே மாவடிப்பள்ளி பெரிய பாலம்





தொடர்ச்சி▲

இது தவிர, அந்தO பயம் பொலிஸாரை கண்டால் எங்களுக்கும் இருக்கின்றது. 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சோதனை நடவடிக்கையின் போது ஜே.வி.பி. என அறிந்தால் அவர் வீடு திரும்ப மாட்டார். அதாவது 87 – 90 காலப்பகுதியில் அதேபோல தான். இப்போதும் அந்த பயம் உள்ளது (நக்கலாக).எல்லாரும் அந்தக் காலத்தினை அனுபவித்திருக்கின்றோம்.

இன்று நாங்கள் தமிழர்களாக, முஸ்லிம்களாக, சிங்களவர்களாக எந்த ஒரு அநீதியும் இல்லாமல் ஒரு நிலைமையை உருவாக்கி இருக்கின்றோம். கொழும்பு அல்லது நாட்டில் உள்ள அரசாங்கம் தேசிய ஒற்றுமை உள்ள அரசாங்கமாக இன்று இருக்கின்றது.

அதாவது கொழும்பு அரசாங்கம் ஆனது இனவாத அரசாங்கம் என இந்தப் பிரதேசத்தில் உள்ள அரசியல்வாதிகள் கூறியிருக்கின்ற நிலையில் அவர்களுடைய வாக்கு வங்கி தற்போது சரிந்து வருகிறது .

தற்போது அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? நான் நினைக்கிறேன். ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்போது அவர்கள் பார்த்திருப்பது இனவாதம் அல்ல, இன ஒற்றுமையைத் தான் அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் – தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என ஒற்றுமையாகிப் பயணிப்பதை அவர்கள் இன்று பார்த்து பயத்தில் உள்ளார்கள். நாங்கள் ஒன்று சேர்ந்து பயணிப்பது என்பது தாய், தந்தையர் ஆகிய உங்களிடம் என்ன என்று கேட்கின்றேன். ரமழான் மாதத்தில் முஸ்லிம் மக்கள் நோன்பு பிடிப்பார்கள். அந்த காலத்தில் தமிழர்களும் பௌத்தர்களும் இந்த விடயத்தை செய்ய மாட்டார்கள்.

அதாவது ஒற்றுமையாக இருப்பது என்பது ரமழான் மாதத்தில் முஸ்லிம் மக்களைபோன்றுதமிழ்மக்களும்பௌத்த மக்களும் அந்த காலத்தில் நோன்பு பிடிப்பது அல்ல. பௌத்தர்கள் வெசாக் கூடு தயாரிப்பார்கள். அதாவது ஒன்று சேர்தல் என்பது பௌத்தர்கள் முஸ்லிம்கள் வெசாக் காலத்தில் வெசாக் கூடு தயாரிப்பது. தீபாவளியாக இருக்கட்டும், தைப்பொங்கலாக இருக்கட்டும் தமிழ் மக்கள் பல்வேறுபட்ட விடயங்களை மேற்கொள்வார்கள். நாங்களும் பொங்கல் போய் சாப்பிடுவதுதான்.ஆனால் பௌத்தர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய நாங்கள் முற்று முழுதாக பொங்கல் தினத்தினை போய் நடத்த மாட்டோம்.

ஆனால் நாங்கள் மனிதர்களாக ஒன்றுபடுவோம். நாங்கள் இளைஞர்களாக ஒன்றுபடுவோம். இலங்கையர்களாக எங்களுடைய கலாச்சார விழுமியங்கள், வேறுபாடுகள் அவ்வாறே இருக்கின்றது. அதனாலே தான் எங்களது ஒற்றுமைகளை, வேற்றுமைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே தான் இவ்வாறான நாட்டினை நீங்கள் அனைவரும் உருவாக்கி இருக்கிறீர்கள். ஆகையினால் நாங்கள் இறுதியாக சொல்லப்போவது என்ன? இந்த நாட்டில் தேசிய ஒற்றுமை என்ற பாலத்தினை உருவாக்குவதை விட வேறு எந்த பாலத்தை உருவாக்க முடியும்?

இந்தப் பாலமானது கடந்த வெள்ள அனர்த்தத்தில் உயிரிழந்த மாணவர்களின் ஞாபகார்த்தத்தின் பயனாக இன்று உள்ளது. இந்தப் பாலத்தின் மறுபக்கம் பார்த்தால் சிங்கள மக்கள் இருக்கின்றார்கள். இந்தப் பாலத்தின் தென்பகுதியில் பார்த்தால் காரைதீவு பகுதியில் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். இந்தப் பாலத்தின் இடது பக்கம் பார்த்தால் கல்முனை பகுதியில் முஸ்லிம் மக்கள் இருக்கின்றார்கள். இதனால் உண்மையிலேயே நாங்கள் பார்க்கின்ற போது தேசிய ஒற்றுமைக்கான பாலம் உண்மையிலேயே இந்த பாலம்தான் ர்னக் கூற முடியும். இந்த பாலம் முழு நாட்டிற்கும் தேசிய ஒற்றுமைக்குமாக தேசிய மக்கள் சக்தியினால் கட்டப்பட்ட பாலமாகும் – க்னன குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க பிரதம அதிதியாகவும்,கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸவும் கௌரவ அதிதியாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களான முத்து ரத்துவத்தை, மஞ்சுள ஆகியோர் விசேட அதிதியாகவுன் கலந்து கொண்டனர்.

இப்பாலம் சுமார் 90 வருடம் பழமை வாய்ந்தது. மக்களின் நீண்டகால கோரிக்கைக்கு அமைய இப்பாலம் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அரசமைப்புப் பேரவையின் உறுப்பினரும், அம்பாறை மாவட்டக் கரையோர பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவாவின் வேண்டுகோளுக்கமைய இப்பாலம் சுமார் 247 மில்லியன் நிதி உதவி ஊடாக புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

மேலும் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் பொறியியலாளர் எம்.பி. அலியார், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை பொறியியலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்,தேசிய மக்கள் சபையின் பிரதேச சபை உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் பிரதேச ஒருங்கிணைப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# தலவாக்கலை சென். கூம்ஸ் தோட்டத்தில் இரவில் நடமாடும் சிறுத்தையினால் பொதுமக்கள் அச்சம்!

(க.கிஷாந்தன்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை சென்.கூம்ஸ் தோட்டத்தில் இரவில் சுற்றித் திரியும் சிறுத்தையினால் பொதுமக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளனர்.

தங்கள் தோட்டத்திற்கு அருகிலுள்ள அடர்ந்த காட்டில் வசிக்கும் இந்தச் சிறுத்தை இரவில் தங்கள் வீடுகளுக்கு அருகில் இரை தேடி வருவதாகவும், தங்கள் வீடுகளில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளான நாய்களையும், கோழிகளையும் இரையாக இழுத்துச் செல்வதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக, இரவில் வீட்டை விட்டு வெளியேறுவது சாத்தியமில்லை என்றும், சிறுத்தை ஏற்கனவே தங்கள் வீடுகளில் வளர்க்கப்படும் பல நாய்களை இரையாக எடுத்துச் சென்றுள்ளதாகவும் மக்கள் மேலும் கூறுகின்றனர்.

லிந்துலை சென்.கூம்ஸ் தோட்டத்தில் மக்கள், சுற்றித் திரியும் சிறுத்தையை பிடித்து, வேறு பொருத்தமான சூழலுக்கு அழைத்துச் சென்று விடுவிக்குமாறு கோருகின்றனர்.

குறித்த பகுதியில் உள்ள ஒரு நபரின் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமராவில் சிறுத்தையின் நடமாட்டம் பதிவாகியுள்ளதோடு, மேற்படி வீட்டில் வளர்க்கப்பட்ட நாயை இழுத்துச் செல்வதும் பதிவாகியுள்ளமை குறிப்பிடதக்கது.

# சாய்ந்தமருதின் பிரதான பாதைகளில் ஒன்று ஆபத்தாக மாறி வருவதாக மக்கள் விசனம்!

## உடனடித் தீர்வை பெற்றுத்தர அரசியல் தரப்புகளிடம் கோரிக்கை!




(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சுனாமிவீட்டுத்திட்டங்கள்அமைந்துள்ள சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் உள்ள மக்களின் பிரதான பாதை மண்சரிவில் சிக்கி அபாய நிலையில் உள்ளது. இது தொடர்பாக பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் அறிவித்தும் பயனில்லை என அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

அரச நிறுவனங்கள் அமுல்படுத்தும் வழமையான வேலைத்திட்டங்களுக்கு தனது பெயரை வைக்க முந்தியடிக்கும் அரசியல்வாதிகள் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முன்வராமை அவர்களின் இயலாமையை காட்டுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

பாடசாலை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், பெண்கள் மதரஸா, கலாச்சார மண்டபம், பள்ளிவாசல், பொது விளையாட்டு மைதானம், பல்வேறு அரச காரியாலயங்கள், முக்கிய திணைக்களங்கள், பொது மக்கள் செறிந்து வாழும் குடியிருப்பு ஆகியன உள்ள இந்த பிரதேசத்தின் பிரதான பாதை முற்றாக சிதைவடைந்து பாவனைக்கு ஆபத்தாக மாறியுள்ளது. இதனை சீரமைக்க பல்வேறு அரச காரியாலயங்களை மக்கள் நாடியும் இதுவரை பொருத்தமான தீர்வு கிட்டவில்லை.

இந்த பிரச்சினையை உடனடியாக கவனத்தில் கொண்டு தீர்வை பெற்றுத் தருமாறு தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும், சாய்ந்தமருது பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான ஏ.ஆதம்பாவா அவர்களிடமும், உரிய அதிகாரிகளிடமும் மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.




# தியாகி திலீபனின் திலீபனிசம் சிந்தனைப் புரட்சி!

## தமிழரின் உரிமை சின்னமாக எழுந்த தியாகம்!



நாகராசா தனுஸ்காந்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

ஈழத்தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் தியாகம், உறுதி மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றின் சின்னமாக விளங்கியவர் தியாகி திலீபன். உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த லெப்டினன் கேணல் தியாகி திலீபனின் 38 ஆவது வருட நினைவு தினம் தமிழர் தாயகத்திலும் ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் அனுட்டிக்கப்படுகின்றது. அவரின் பெயர் தமிழீழ மக்கள் மனதில் என்றும் அழியாத வரலாறாகப் பதிந்துள்ளது.

திலீபன் என்ற இயக்கப் பெயரைக்கொண்ட பார்த்திபன், யாழ். ஊரெழுவைச் சேர்ந்த இராசையா ஆசிரியரின் புதல்வராவார். இள வயதில் தாயை இழந்த அவர் தந்தையின் அரவணைப்பில் வளர்ந்து ஊரெழு அரசினர் பாடசாலையில் ஆரம்ப கல்வி பயின்றார். இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்த அவர், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் சித்தியடைந்து மருத்துவ பீடத்துக்குத் தெரிவானார். எனினும் 1983 கறுப்பு ஜூலையைத் தொடர்ந்து மருத்துவபீட உயர் கல்வியைத் துறந்து விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளியாகத் தன்னை இணைத்துக்கொண்டார்.

புலிகள் அமைப்பில் இணைந்த பார்த்தீபன், திலீபன் எனப் பெயர்மாற்றம் பெற்று போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டு நிறைவு செய்த பின்னர் வலிகாமப் பிரதேசத்தில் அரசியல் பணிகளில் ஈடுபட்டார். அவரது ஆற்றல், அர்ப்பணிப்பு காரணமாக 1985 ஆம் ஆண்டு யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளராகக் கடமைபுரிந்தார்.

அவ்வேளை படையினர் பல்வேறு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது இடம்பெற்ற முறியடிப்பு சமரின்போது திலீபன் வயிற்றில் விழுப்புண் அடைந்தார். இதனால் அவரது சிறுகுடலின் ஒரு பகுதி சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டபோதிலும் புத்துயிர்பெற்று அரசியல் பணிகளில் ஈடுபட்டார். அவரது சிறுகுடல் அகற்றப்பட்டதை இனவாதிகளும் ஸ்ரீலங்கா அரசும் தெரிந்துகொண்டு, திலீபனின் தியாகத்தைக் கொச்சைப் படுத்தும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றபோதிலும், தமிழ் மக்கள் அதனைப் புறந்தள்ளி திலீபனின் தியாகத்தை நினைவுகூர்ந்து வருகின்றனர்.

1985களில் தமிழர் தாயகத்தின் உருவாக்கத்

தொடர்ச்சி▼

# தியாகி திலீபனின் திலீபனிசம் சிந்தனைப் புரட்சி!

தொடர்ச்சி ▲

திற்கான உட்கட்டுமானத் திட்டங்கள் முன்னெடுக் கப்பட்டபோது திலீபனின் பங்களிப்புக் குறிப் பிடத்தக்கது. பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழீழ மாணவர் அமைப்பு, சுதந்திரப் பறவைகள், ரடோ போன்ற அமைப்புகளின் உருவாக்கத்தில் திலீபனின் பங்களிப்பு முக்கியமாக இருந்தது.

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் யாழ். கோட்டைக்கு முன்பாக இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றிய லெப்டினன் கேணல் திலீபன், ஈழத்தமிழ் மக்களின் தேசிய எழுச்சி எப்போதெல்லாம் எழுவதற்கு அறிகுறி கள் தென்படுவதற்கு ஆரம்பிக்கின்றதோ அப்போ தெல்லாம் எதிரி அவற்றை அடக்கி ஒடுக்குவதற்காக ஒப்பந்தங்களுடன் வருகிறான். இலங்கை இந்திய ஒப்பந்தமும் அவ்வகையில் மக்களின் விடுதலை தாகத்தை அடக்கி ஒடுக்கும் ஒன்றே என்று கூறினார். அந்த தீர்க்கதரிசனத்தின் யதார்த்தத்தை இன்றைய சூழலிலும் நினைத்துப் பார்ப்பது பொருத்தமானது.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட் டத்தில் மட்டுமல்ல சாத்வீகப் போராட்டத்திலும் உறுதியானவர்கள் என்பதைத் தலைவர் வழியில் தியாகி திலீபன் நிரூபித்தார். 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.55 மணிக்கு அப்போது யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்த லெப்டினன் கேணல் திலீபன் நீராகாரமுமின்றி போராட்டத்தை ஆரம்பித்தபோது காந்திதேச அரசு பொருட்டாகவே கருதவில்லை. ஏளனமாக கையாண்டது என்பது அப்போது பலரும் அறிந்த உண்மை.

1. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, இன்னமும் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

2. புணர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத் தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள், உடனடி யாக நிறுத்தப்பட வேண்டும்.

3.இடைக்கால அரசு நிறுவப்படும்வரை புணர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலை களும் நிறுத்தப்பட வேண்டும்.

4.வடக்குக் கிழக்கு மாகாணங்களில், பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத் தப்பட வேண்டும்.

5.இந்திய அமைதிப்படையின் மேற்பார்வை யில், ஊர்காவல் படை என அழைக்கப்படுவோ ருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங் களில் குடிகொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

இந்த 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, செப்ரெம்பர் 15, 1987 அன்று, யாழ்ப்பாணத்தின் நல்லூர் வீதியில் முருகன் கோயில் அருகில், "எனக்கு என்ன நேர்ந்தாலும், சுய நினைவு இருந்தாலும், இல்லாவிட்டாலும் யாரும் எனக்கு உணவோ, சிகிச்சையோ அளிக்கக் கூடாது" என உறுதியாகக் கூறி உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்.

இந்தியப் படையினர் நிலைகொண்டிருந்த வேளை போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்த புலிகள், போராட்ட வடிவத்தை மாற்றி தமிழர் இலட்சியத்தை வலியுறுத்த திலீபனால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத் துக்கு அப்போது வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் அடையாள உண்ணா விரத நிகழ்வுகளும் எழுச்சி ஊர்வலங்களும் நடத் தப்பட்டன.

திலீபனின் போராட்டத்தை அலட்சியப்படுத்து வதன்மூலம், கருத்தில் எடுக்காது தவிர்ப்பதன் மூலம் மழுங்கடித்து விடாலமென இந்திய தரப்பி னர் திடமாக நம்பினர். எனினும் நீராகாரமின்றி உறுதி தளராத போராட்டத்தை சில தினங்களின் பின்னரே உணர்ந்துகொண்டார்கள். பழ.நெடுமாறன், பண்ருட்டி, ராமச்சந்திரன் போன்ற தமிழக அர சியல்வாதிகள் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு வந்து உண்ணா நோன்பிருந்த லெப்டினன் கேணல் திலீபனைப் பார்வையிட்டார்கள்.

மறுபுறம் அப்போது இந்தியத் தூதுவராக இருந்த ஜே.என்.டிக்ஷித், இந்திய தென்பிராந்தியத் தள பதி திபேந்தர் சிங் உள்ளிட்ட இந்திய உயர்மட்டக் குழுவுக்கும் புலிகளுக்கும் இடையில் இடைக் கால நிர்வாக சபை தொடர்பான பேச்சு நடத்தப்பட்ட போதிலும் வெற்றியளிக்கவில்லை.

1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு லெப்டினன் கேணலாக, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் தியாக மரணம் எய்தினார். இச்செய்தி கேட்டு தமிழர் தாயகம் சோகத்தில் மூழ்கியது. இன்று அவரின் 38ஆம் ஆண்டு நினைவு நாளை நாம் கடைப்பிடிக் கையில், அது ஒரு சாதாரண நினைவு நிகழ்வாக இல்லாமல், தமிழர் அரசியல் வரலாற்றின் ஓர் அத்தி யாயத்தை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தும் நாளாகும். திலீபன் காட்டிய தியாகமும், அவரது உறுதியும், இன்றைய தலைமுறைக்கு அரசியல் நம்பிக்கையையும், விடுதலைச் சிந்தனையையும் ஊட்டுகிறது.

உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் சாத் வீகரீதியான போராட்ட ஆயுதமாக உண்ணா விரதம் பயன்படுத்தப்படுகிறது. ஐரிஸ் விடுதலைப் போராட்ட வரலாற்றில் பொபி சானிஸ் சிறையில் இருந்தவாறு உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தார். ஆனால் ஈழ விடுதலைப் போராட்டத்தில் நீராகாரமின்றி தியாகி திலீபனும் நீராகாரத்துடன் உண்ணா நோன்பிருந்த அன்னையர் முன்னணி யைச் சேர்ந்த அன்னை பூபதியும் உயிர்துறந்து போராட்டத்துக்கு வலுச் சேர்த்தார்கள். இருவருமே மகாத்மா காந்தி பிறந்த தேசத்திடம் காந்தியம் வென்ற சாத்வீக அறைகூவலை விடுத்துள்ளனர்.

திலீபனின் தியாகம் தமிழர் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. "என் உயிரை விடுவேன், ஆனால் என் மக்களின் உரிமையை விற்க மாட்டேன்" என்ற அவரது நிலைப்பாடு, தமிழர்களின் அரசியல் சிந்தனையில் நிலைத்த அடையாளமாகப் பதிந்தது. அவரின் மரணம், இந் தியாவின் பங்களிப்பு மற்றும் இலங்கை அரசின் கொள்கைகள் குறித்து பல்வேறு கேள்விகளை

தொடர்ச்சி ▼

# தியாகி திலீபனின் திலீபனிசம் சிந்தனைப் புரட்சி!

தொடர்ச்சி▲

எழுப்பியது. குறிப்பாக, தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் புறக்கணிக்கும் எந்த அரசியல் உடன்படிக்கையும் நீடிக்க முடியாது என்பதை உலகுக்கு உணர்த்தியது.

திலீபனின் தியாகத்திலிருந்து பிறந்த அரசியல் – சமூக சிந்தனையே “திலீபனிசம்” என அழைக்கப் படுகிறது. இது மூன்று முக்கிய அம்சங்களை உள்ளடக்கு கிறது.

1. உறுதி – தனிநபர் வாழ்வை விட மக்களின் உரிமையை மேலாக்கம் செய்வது.

2. தியாகம் – அடக்குமுறைக்கு எதிராக வன்முறை இல்லாமலேயே உயிரை பணயம் வைப்பது.

3. உரிமைப் போராட்ட நம்பிக்கை – தமிழர்களின் அடிப் படை உரிமைகள் காலத்தால் அழியாதவை என்பதை உலகுக்கு உணர்த்துவது.

“திலீபனிசம்” என்பது ஒரு தனிநபரின் உயிர் தியாகத்தை விட, ஒரு மக்களின் அரசியல் தத் துவமாக மாறியது. இன்று பலரும் திலீபனின் நினைவு நாளை அனுசரிக்கும் போது, அதனை திலீபனிசம் – தமிழர் உரிமைக்கான பாதை எனக் குறிப்பிடுகின்றனர்.

ஒரு கொள்கையில் ஒருவர் எவ்வளவு உறுதியாக இருக்க முடியும், ஒரு போராட்டத்தை எவ்வளவு உன்னதமாக நடத்த முடியும் என்று உலகுக்கே உணர்த்தியவர் திலீபன். திலீபன் தன் மக்களுக்காக 12 நாள்கள், அதாவது 265 மணி நேர மாக ஒரு சொட்டுத் தண்ணீர் கூட உடலுக்குள் செலுத்தா மல் உண்ணாவிரதம் இருந்தவர். தன் 23 ஆவது வயதில், 1987 செப்ரெம்பர் 26 ஆம் நாள் காலை 10.48 மணிக்கு உயிரிழந்தார்.

தியாகி திலீபனின் நினைவு நாளில், அவரின் இலட்சி யங்களை மீண்டும் மனதில் நிறுத்தி, தமிழர் உரிமைக்கான அரசியல் போராட்டம் தொடர வேண்டும் என்பதே அவருக்கு உரிய மரியாதையாகும்.

இது திலீபனிசம் சிந்தனைப்புரட்சி என வரலாற்றில் பதியட்டும்.

■



## உளம் வாடுதே திலீபா...!

தமிழ் மக்களுக்காக உண்ணா நோன்பு இருந்து தனது உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இக் கவிதை பிரசுரிக்கப்படுகிறது.

தமிழினத்தின் மீதான
அடக்குமுறையை உடைக்க
புறப்பட்ட வீரமறவர்கள்
அகிம்சையிலும் போராட
முடியும் எனக் காட்டினாய்
திலீபா..!

அமைதி காக்க வந்த
பாரதப் படை தமிழர்
நிலத்தில் புரிந்த அடக்குமுறைக்கு
காந்திய வழியில்
உண்ணா நோன்பிருந்தாய்
திலீபா..!

கருணை கந்தன்
தேரோடும் வீதியில்
பன்னிரு நாள் தனித்திருந்து
உடலை மெழுகுவர்த்தியாய்
தமிழினத்திற்காக உருக்கினாய்
திலீபா..!

முப்பத்தெட்டு ஆண்டுகள்
கடந்தும் தமிழினத்திற்கு
நீதியில்லை வழி நடத்த
தலைவனுமில்லை – இனியும்
மீண்டெழுமா தமிழினம்
திலீபா..!

வித்தாகி விருட்சமான
தியாக தீபத்தை கூட
ஒற்றுமையாக நினைவு கூர
தமிழினம் தயாரில்லை
நினைக்கையில் உளம் வாடுதே
திலீபா..!



தாயினி சிவகுமார்

## புதுக்குடியிருப்பில் திம்பிலியில் இளம் குடும்பஸ்தர் மூன்று இடியன் துப்பாக்கிகளுடன் நேற்றுக் கைது!

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு திம்பிலியில் சட்டவிரோத துப் பாக்கிகளுடன் இளம் குடும்பஸ்தர் ஒருவரைத் தாங் கள் கைது செய்துள்ளனர் எனப் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றையதினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது :-

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு திம்பிலியில் உள்ள வீடு ஒன்றில் சட்ட விரோதமாக துப்பாக்கி (இடியன் துவக்கு) மூன்றினை மறைத்து வைத்திருக்கின்றார் என முல் லைத்தீவு மாவட்டப் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸாரால் இந்தத் துப்பாக்கிக மீட்கப்பட்டன. அத னைத் தமது வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டில் திம்பிலி பகுதியை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர். விசாரணைகளின் பின்னர் இன்றைய தினம் சந் தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் -22.09.2025




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தாயின் உடல் நலத்துக்காகச் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனைகளை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். உணவு முறையில் கவனம் தேவை.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பிரார்த்தனை அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்த நேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.




அதிர்ஷ்டகரமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிகள் நலம் பயப்பதாக காணப்படும். சலுகைகளும் ஊக்கத்தொகையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும். பயனுள்ள வகையிலும் நல்ல செயலுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் காணப்படுகின்றது. நீங்கள் சுறுசுறுப்பாகவும் தைரியமாகவும் உணர்வீர்கள்

# இன்றைய ராசி பலன்கள் -22.09.2025




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இரவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவிற்கும் சேமிப்பிற்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.

தூக்கமின்மை மற்றும் பதட்டம் காரணமாக தலைவலி காணப்படும்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் உறுதியும் ஆற்றலும் நிறைந்திருக்கும்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.

தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும்.




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களை தீட்டுங்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும், இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# சமூகத்தில் போலி நாணயத்தாள் பாவனை குற்றப் புலனாய்வு திணைக்களம் அறிவிப்பு



சமூகத்தில் போலி நாணயத்தாள் பாவனை உள்ளன என குற்றப் புலனாய்வு திணைக்களம் கண்டறிந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் அத்தியட்சகர் எப்.டபிள்யூ. வூட்லர் தெரிவித்தார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 407 போலி நாணயத்தாள்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனை கூறியுள்ளார்.